விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 360 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 28 வியாழக்கிழமை (14.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## க.பொ.த உ/த மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் உயிரியல் விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பப் பிரிவு மாணவர் 16

## வடக்குக்கு செம்மஞ்சள் எச்சரிக்கை கடுமையான மழை பெய்யக்கூடும்

### அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

சீரற்ற காலநிலை தொடர்பில் வட மாகாணத்திற்கு செம்மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வளிமண்டல குழப்பம் காரணமாக இன்று முதல் அடுத்த சில நாட்களுக்கு வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, தென் மாகாணங்களிலும் நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மழையுடன் கூடிய வானிலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான கனமழை பெய்யக் 15

## காரைநகர் கடற்பரப்பில் ஆறு தமிழக மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்பரப்பில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஆறு தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தமிழகத்தைச் சேர்ந்த ஒருபடகையும் அதிலிருந்து ஆறு தமிழக மீனவர்களையும் 15

## தொடர் காய்ச்சல் இளம் குடும்பப் பெண் உடுவிலில் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

தொடர் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் உடுவில் - கற்பகப் பிள்ளையார் 15

## 41 மேலதிக வாக்குகளால் 2024ஆம் ஆண்டு பட்ஜெட் நிறைவேற்றம்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு பாராளுமன்றத்தில் 41 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 81 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஒருவர் வாக்களிப்பில் இருந்து விலகியிருந்தார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## மருமகனின் தாக்குதலில் மாமனார் மரணம்

### கரவெட்டியில் சம்பவம்

(கரணவாய்)


மருமகனின் தாக்குதலுக்கு இலக்காகிய மாமனார் உயிரிழந்துள்ளார்.

கரவெட்டி வதிரியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த தேவராசா அன்ரன் (வயது-54) என்பவரே 15

## கடன் மறுசீரமைப்பு இல்லாவிட்டால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும்

### சபையில் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மற்றும் கடன் மறுசீரமைப்பை இல்லாதொழித்தால் முழு நாடும் மீண்டும் வீழ்ச்சியடையும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையொன்றை ஆற்றியபோதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் 15

## யுத்தம் இல்லாத நாட்டில் பாதுகாப்புக்கு ஏன் பெருந்தொகைப் பணம்?

### சபையில் சிறீதரன் கேள்வி



(கொழும்பு)

யுத்தமில்லாத, 15 ஆண்டுகளாக குண்டு சத்தம் கேட்காத நாட்டில் தொடர்ந்தும் பல 15




நடுவு நிலை தவறா நன்னெறி நோக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
1997 . 05 . 03



இறப்பு
2023 . 12 . 13

## திருமதி மயூதரன் துசிந்தினி

உடுவில் கிழக்கு அண்ணா சனசமூக நிலையத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயூதரன் துசிந்தினி அவர்கள் நேற்று (13.12.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகநாதன் - ஜீசிலா தம்பதியரின் அன்பு மகளும் கந்தசாமி - நாகராணி ஆகியோரின் அன்பு மருமகளும் மயூதரனின் (ஒஸ்ரியா) பாசமிகு மனைவியும் , சசிந்தினி, துஷானி, சஜீபா, சுஜீபா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சத்தியராஜ், உசந்தன் ஆகியோரின் மைத்துனியும் துசிந்திரன், லோகேந்திரன், தசிந்திரன், நகுலேஸ்வரன், ரதீஸ்வரன், ரஜிக்குமார் ஆகியோரின் மருமகளும் சிவக்கொழுந்து, மகேஸ்வரி, வசந்தா, புஸ்பலதா, புஸ்பமலர், புஸ்பரஞ்சினி, ரேணுகா, சகிலா ஆகியோரின் பெறாமகளும் மகேந்திரன், சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் சுமதி, வாகீசன், வாசுகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2023) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(C-7895)

## விமல் வீரவன்சவின் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவினால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

குறித்த வழக்கு மீதான விசாரணை நேற்றைய தினம், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதனையடுத்து வழக்கு மீண்டும் அடுத்த வருடம், ஜனவரி மாதம் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்தநிலையில், 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம், முதலாம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை அமைச்சராக செயற்பட்ட காலப்பகுதியில் வேதனம், வருமானத்தின் ஊடாக ஈட்ட முடியாத சொத்துக்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு குறித்த வழக்கை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7892)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

கனடாவில் வேலைவாய்ப்பு
மற்றும்
TOURIST விசா
தேவைப்படுபவர்கள்
உடன் தொடர்பு கொள்ளவும்.


- 5-18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான Student விசாவும் பெற்றுத் தரப்படும்.
- பாதுகாவலர்களுக்கும் 10 வருட விசா பெற்றுத் தரப்படும்.
- மலேசியாவில் உணவகம் ஒன்றில் பணியாற்ற 5 பேர் தேவைப்படுகின்றனர்.

விண்ணப்பிக்க இன்றே அழையுங்கள்.
Hybrid international hub (pvt)ltd.
யாழ்ப்பாணம்
((வேம்படி மகளிர் கல்லூரி அருகில்))

தொடர்புகளுக்கு
077 815 5920, 076 250 0098,
021 222 1265

(C-7891)


# மூன்றாம் ஆண்டு நினைவுநாள்



மண்ணில்
18.08.1936

விண்ணில்
17.11.2020

அமரர் மாணிக்கம்
## வேலும்மயிலும்
(உரிமையாளர் ஈஸ்வரி அரிசி ஆலை
எள்ளங்குளம்– சமரபாகு)

திதி - கார்த்திகை வளர்பிறை 3 ஆம் நாள் 14.12.2023

பாசத்தலைவனை போற்றி வணங்குகிறோம்.

நீங்கா நினைவில்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

விமலாதேவி - தங்கராசா, வசந்தாதேவி - அருந்தவராசா(கனடா),
விஜயாதேவி - கார்த்திகேசு, லிங்கேஸ்வரன் - வதனா(சுவிஸ்),
லிங்கராணி - சிவநேசன்(கனடா), தயாநிதிதேவி - விவேகானந்தன்(சுவிஸ்)
நேசலிங்கம் - நிரோஜினி, தமேந்தினி - நிசந்தன்,
வீரரூபன் - பவித்திரா (மருத்துவர் - மந்திகை ஆதார வைத்தியசாலை),
கௌசலா - காந்தரூபன்(பிரான்ஸ்), கல்பனா - அந்தணன்(கனடா),
நிரஞ்சனா - நவநீதன்(கனடா)

"ஈஸ்வரி இல்லம்",
சமரபாகு,
வல்வெட்டித்துறை.

(C-7890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனித உரிமை மீறல்

## குற்றச்சாட்டிற்குள்ளானவர்களை பதவி நீக்க வேண்டும்

## அமெரிக்க செனெட் உறுப்பினர்கள் கோரிக்கை

**(வோஷிங்டன்)**

**இலங்கை அரசாங்கம் அர்த்தபூர்வமான பாதுகாப்பு சீர்திருத்தத்தை முன்னெடுக்க வேண்டும்; வடக்கு-கிழக்கில் உள்ள பாதுகாப்புப் படையினரை சமாதான காலத்திற்கு ஏற்ற வகையில் குறைக்க வேண்டும். மேலும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என நம்பகத்தன்மை மிக்க முறையில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் பதவிகளில் இருந்து நீக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என அமெரிக்க செனெட் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

இலங்கை மக்களின் அமைதியான, ஜனநாயக மற்றும் பொருளாதார அபிலாசைகளிற்கு அமெரிக்காவின் ஆதரவை வெளியிடும் தீர்மானமொன்றை அமெரிக்க செனெட் உறுப்பினர்கள் முன்மொழிந்துள்ளனர்.

இலங்கை மக்களிற்கும் ஊழலை முடிவிற்கு கொண்டு வருவதற்கான நீதியை நிலைநாட்டுவதற்காக ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான அவர்களின் முயற்சிகளிற்கும் ஆதரவாக அமெரிக்க செனெட்டர்கள் இரு கட்சி தீர்மானமொன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கம் நோய் போல பரவியிருக்கும் ஊழல் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலுக்கான முடிவை காண்பதற்கான நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்கவில்லை. உள்ளூராட்சித் தேர்தலை கால வரையறையின்றி பிற்போட்டதன் மூலம் ஜனநாயகத்தினை பலவீனப்படுத்தியுள்ளது. இந்த நெருக்கடிகளிற்கு காரணமானவர்கள் என குற்றம்சாட்டப்படும் பலர் இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிற்கு எதிரான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்த உரிமை மீறல்கள் இலங்கையின் உள்நாட்டு யுத்த காலத்துடன் தொடர்புடையவை எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கமும் பாதுகாப்புப் படையினரும் அனைத்து இலங்கையர்களிற்கும் அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான, சுதந்திரமாக ஒன்றுகூடுவதற்கான, உயிரிழந்த தங்கள் உறவுகளை அமைதியாக நினைவேந்துவதற்கு உள்ள உரிமையை மதிக்க வேண்டும் என அமெரிக்க செனெட் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-5-6)

# 2ஆம் கட்ட கொடுப்பனவை வழங்க ஐ.எம்.எப் அனுமதி

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கப்படவுள்ள இரண்டாவது கடன் தவணையான 337 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதி வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கையுடனான 48 மாத விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான முதலாவது மீளாய்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட மொத்த உதவி சுமார் 670 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக் கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை, இலங்கை காட்டிய முன்னேற்றத்தில் திருப்தி அடைவதாக சுட்டிக் காட்டியுள்ளது. (நி-5-6)

## பட்ஜெட்டுக்கு எதிராக

# சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கு எதிராகவும் 20,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை தனியார் துறையினருக்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் பதாகைகளையும் சுலோக அட்டைகளையும் ஏந்தி இருந்ததோடு எதிர்ப்பு கோஷங்களையும் எழுப்பினர். (நி-5-6)

# சுமார் ஒரு லட்சம்

## வலி நிவாரண மாத்திரைகள் மீட்பு

(சென்னை)

இந்தியாவின் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தை அடுத்த வேதாளை கடற்கரையில் இருந்து நாட்டுப்படகில் இலங்கைக்கு நேற்று முன்தினம் கடத்த முயன்ற சுமார் ஒரு இலட்சம் வலி நிவாரண மாத்திரைகள் இந்தியக் கடலோர காவல் படையினரால் நடுக்கடலில் சுற்றிவளைக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது.

இந்திய கடலோர காவல் படை வீரர்களை கண்டதும் படகில் இருந்தவர்கள் கடலில் குதித்து தப்பித்ததால் படகுடன் வலி நிவாரண மாத்திரைகளை பறிமுதல் செய்து இந்தியக் காவல் படை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட வலி நிவாரண மாத்திரைகள் போதை மாத்திரைகளாக இலங்கையில் பயன்படுத்தப்படுவதற்காக கொண்டு செல்லப்பட்டதாகவும் இதன் மொத்த இந்திய மதிப்பு சுமார் ரூ.8 இலட்சம் இருக்கலாம் எனவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (நி-5-6)

## மசகு எண்ணெய் விலை ஏற்றம்

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்றைய தினம் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 68.73 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 73.24 அமெரிக்க டொலராக நிலவுகிறது. இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.27 அமெரிக்க டொலராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. (நி-5-6)

# வருமான வரி விதிப்புக்கு எதிராக

## பாராளுமன்றத்திற்கு அருகில் போராட்டம்



(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்களினால் நேற்று பாராளுமன்றத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் பொல்துவ சந்தியில் இருந்து பாராளுமன்ற நுழைவாயில் தடைப்பட்டது.

அதிக வருமான வரி விதிப்புக்கு எதிராக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், பொறியியலாளர்கள், வங்கிகள் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

அப்போது போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதில் மருத்துவம், பொறியியல், வங்கி மற்றும் பல துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் ஒன்றிணைந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# இந்த ஆண்டில் 50 கோல்கள் அடித்து அசத்திய ரொனால்டோ

கிறிஸ்டியானோ ரொனால்டோ 2023ஆம் ஆண்டில் தனது 50 ஆவது கோலை அடித்துள்ளார்.


கிங் சாம்பியன் கோப்பை தொடரின் காலிறுதியில் அல் நஸர் மற்றும் அல் ஷபாப் அணிகள் மோதின. பரபரப்பாக தொடங்கிய இந்தப் போட்டியின் முதல் பாதியில் அல் நஸர் 3-1 என முன்னிலை வகித்தது.

அதன் பின்னரான இரண்டாம் பாதியின் 74 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ புயல்வேகத்தில் செயற்பட்டு கோல் அடித்தார். இது இந்த ஆண்டில் மட்டும் அவர் அடித்த 50ஆவது கோல் ஆகும்.

ஆட்டத்தின் அல் ஷபாப் அணிக்கு ஹட்டன் பஹெபிரி மூலம் மேலும் ஒரு கோல் கிடைத்தது. ஆனால், 90+6 ஆவது நிமிடத்தில் முகமது மரன் அபாரமாக கோல் அடித்து அல் நஸரின் வெற்றியை உறுதி செய்தார்.

இறுதியில் அல் நஸர் 5 - 2 கோல் வித்தியா சத்தில் அல் ஷபாப் அணியை வீழ்த்தி அரை யிறுதிக்கு முன்னேறியது.

முன்னதாக, ஐரோப்பாவில் நான் கொடுத் ததை விட இரண்டு மடங்கினை (வெற்றி) அல் நஸருக்கு வழங்குவேன் என ரொனா ல்டோ கூறியிருந்த நிலையில், தற்போது அவரது அணி காலிறுதியில் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ( நி-5-6)



# தென்னாபிரிக்க அணி வெற்றி




இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது இருபது -20 போட்டியில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது போட்டியில் தென்னாபிரிக்க அணி நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

இந்திய அணியில் தொடக்க வீரர்களாக களமிறங்கிய ஜெய்ஸ்வால் மற்றும் சுப்மன் கில் ஆரம்பத்திலேயே ஓட்டங்கள் எதுவும் குவிக்காமல் விக்கெட்டை பறிகொடுத்து வெளியேறினர்.

பின்னர் ஜோடி சேர்ந்த கப்டன் சூர்யகுமார் மற்றும் ரிங்கு சிங் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

சூர்யகுமார் 36 பந்துகளில் 56 ஓட்டங்கள் குவித்து அவுட்டானார். ஆனால் இறுதிவரை ஆட்டமிழக்காமல் அதிரடியாக விளையாடி வந்த ரிங்கு சிங் 39 பந்துகளில் 9 பவுண்டரி மற்றும் 2 சிக்சர்கள் விளாசி 68 ஓட்டங்கள் குவித்தார்.

இதற்கிடையில் மழை குறுக்கிட்டதால் இந்திய அணியின் பட்டிங் இன்னிங்ஸ் நிறைவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. 19.3 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 7 விக்கெட் இழப்பிற்கு 180 ஓட்டங்கள் குவித்து இருந்து மழை குறுக்கீடு காரணமாக ஆட்டம் 15 ஓவர்களாக குறைக்கப்பட்டு 152 இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

சிறப்பான தொடக்கம் அமைத்து கொடுத்த ரீசா ஹென்ட்ரிக்ஸ் 49 ஓட்டங்கள் குவித்து குல்தீப் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். பின் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஐடன் மார்க்ராம் தன் பங்கிற்கு 17 பந்துகளில் 30 ஓட்டங்கள் குவித்தார். இறுதியில் 13.5 ஓவர்கள் முடிவிலேயே தென்னாபிரிக்க அணி 154 ஓட்டங்கள் குவித்ததுடன் இந்திய அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி வீழ்த்தி அபார வெற்றி பெற்றுள்ளது. (நி-5-6)

# மீண்டும் களமிறங்கும் ரஸ்ஸல்

2021ஆம் ஆண்டு ஐக்கிய அரபு அமீர கத்தில் நடைபெற்ற இருபது -20 உலகக் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக விளையாடிய ஆந்ரே ரஸ்ஸல், இரண்டு ஆண்டுகள் கழித்து மீண்டும் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக் கிரிக்கெட் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், ஐந்து போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் விளையாடுவதற்காக, மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.





இந்நிலையில், இந்தத் தொடருக்கான 15பேர் கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோவ்மேன் பவல் தலைமையிலான அணியில், ஷாய் ஹோப், ரோஸ்டன் சேஸ் மேத்யூ ஃபோர்டே, ஷிம்ரோன் ஹெட் மியர், ஜேசன் ஹோல்டர், அகேல் ஹோசைன், அல் ஸாரி ஜோசப், பிராண்டன் கிங், கைல் மேயர்ஸ், குடகேஷ் மோட்டி, நிக்கோலஸ் பூரன், ஆந்ரே ரஸ்ஸல், ஷெர்ஃபேன் ரூதர்ஃபோர்ட், ரொமாரியோ ஷெப்பர்ட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி செலுத்தாதவர்கள் மீது கடும் நடவடிக்கை

## அரசு எச்சரிக்கை



(கொழும்பு)

வரி செலுத்தாதவர்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்து வரும் நிலையில் இது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் பொருளாதாரம் முழுமையாக வீழ்ச்சியடைந்து காணப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்த வரி திருத்தங்களை பொதுமக்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம்.

ஆனால் அவ்வாறு செய்யாமல் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. வரி அதிகரிப்பதை மக்கள் தாங்கிக் கொண்டாலும் அது தொடர்பில் மக்களிடம் எதிர்ப்பு இருக்கின்றது.

வரி செலுத்துவதில் இருக்கும் வெறுப்பை பார்க்கிலும் வரி தொடர்பான நிர்வாகம் வலுவாக காணப்படாமையே இதற்குக் காரணம்.

வரி அதிகரிப்பதானது அரச வருமானத்தை ஈட்டுவதற்காக மாத்திரம் முன்னெடுக்கப்படும் மாற்று வழி அல்ல.

வரி அறவிடல் மற்றும் வரி செலுத்துதல் நடவடிக்கையில் அனைவருக்கும் அது சமமாக பகிரப்படுகின்றது. அதேநேரம் வரி செலுத்தாதவர்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அது தொடர்பிலும் அரசாங்கம் அவதானம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும். இவ்வாறு அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (நி-5-6)


# சாவகச்சேரி நகராட்சி மன்றம் 2024 ஆம் ஆண்டுக்கான அறிவித்தல்

1. நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பொது அறிவித்தலானது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.
2. நகரசபை கட்டளைச் சட்டத்தின் 160 (3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10% ஆன வரியொன்றினை 2024ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, யூன் 30, செப்டெம்பர் 30 மற்றும் டிசெம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும்.
3. 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வருடாந்த ஆதனவரி முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும். குறித்த கந்தாயத்திற்குரிய கட்டணம் அக்கந்தாயத்தின் முதல் மாதத்திற்குள் செலுத்தப்பட்டால் 5% கழிவு அனுமதிக்கப்படும்.
4. மேற்சொல்லப்பட்ட பந்தி - 1 இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் ஆதனவரி செலுத்தப்படாதவிடத்து வெற்றுக் காணிகள், வதிவிடங்கள் மீது 15% உம் ஏனைய இடங்கள் மீது 20% உம் விறாந்துக்கட்டணம் அறவிடப்படும்.
5. ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளையும் ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக 31.01.2024 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.
6. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் அனைத்தும் 2024 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம், வியாபார வரிக்கட்டணங்களை செலுத்தி 31.03.2024 காலப்பகுதிக்குள் உரிமம், பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளாத, வியாபார வரி செலுத்தாத வியாபார நிலையங்கள் அனைத்தும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும்.
7. 2024 ஆம் ஆண்டிற்கான விளம்பரக் கட்டணங்களைச் செலுத்தி விளம்பரங்களுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும். புதிதாக அமைக்கப்படும் விளம்பரங்கள் அனுமதி பெற்றே காட்சிப்படுத்தப்பட வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் நகரசபையினால் அகற்றப்படும்.
8. 2024 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி உரிமத் தகடுகளையும் வளர்ப்பு நாய்களுக்கான பதிவுகளையும் உரிய கட்டணங்கள் செலுத்தி மேற்கொள்ளவும்.
9. ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச்சொந்தக்காரர்கள் பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை நகரசபையில் சமர்ப்பித்து பெயர்மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும்.
10. நகரசபைக்கு உட்பட்ட தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், எல்லைச்சுவர், குழாய்க்கிணறுகள் அமைப்பதாயின் அனுமதி பெற்று அமைக்கப்படல் வேண்டும். கட்டடத்தினை புனரமைப்பதாயினும் நகரசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ள வேண்டும். கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும். கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் நகர சபையுடன் தொடர்பு கொண்டு அமைவுச்சான்றிதழ் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி அமைவுச் சான்றிதழை (COC) பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.
11. நகரசபைக்குட்பட்ட நிலங்கள் பிரிக்கப்படும் போதோ அல்லது ஒன்றிணைக்கப்படும் போதோ நகரசபையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். பிரிக்கப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட நிலத்தின் நிலஅளவைப் படத்திற்கான அனுமதியினைப் பெற்ற பின்னரே குறித்த ஆதனத்தில் அபிவிருத்தி வேலைகளையோ விற்பனை செயற்பாட்டினையோ மேற்கொள்ள முடியும்.
12. 2000 ஆம் ஆண்டு 22 ஆம் திகதிய 1159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் திண்மக்கழிவுகளை நகரசபைக்கு ஒப்படைக்கும் போது தரம் பிரித்து வழங்க வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்படல் வேண்டும்.

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

(C-7889)


# இராசிபலன்

14.12.2023
கார்த்திகை 28, வியாழக்கிழமை
துதியை பின்னிரவு 3.08 மணிவரை

மூலம் முற்பகல் 11.41 மணிவரை
சுபநேரம் -7.51-9.21 மணிவரை
இராகு காலம்-1.51-3.21 மணிவரை

சந்திராஷ்டமம்
ரோகினி, மிருகசீரிடம்.

வளவன்

**மேஷம்** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பகையொன்று நட்பாகலாம், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**ரிஷபம்** குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்

**கன்னி** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**தனுசு** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு.

**மீனம்** மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

என்னைத் துன்புறுத்துகிறவன் எனக்கு பலத்தை போதிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்செய்கையில் நோய் வீரியத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நெற் பயிர்ச்செய்கையில் வெண் முதுகுதத்தி மற்றும் கபிலத் தத்தி நோய்த்தாக்கம் வேக மாக பரவி வருகின்ற நிலை யில் அதனைக் கட்டுப்படு த்துதல் தொடர்பான விசேட கலந்துரையாடல் மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் நேற்று முன் தினம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

குறித்த கலந்துரையாட லில், யாழ்ப்பாண மாவட் டத்தில் பொருத்தமற்ற இர சாயன மருந்துகள் மற்றும் உரங்களின் பாவனை காணப்படுவதோடு, இய ற்கை விவசாயத்தினை பின் பற்றுதல் மற்றும் தற்போ தைய பொருளாதார பிரச்சி னையினை மாற்றி சிறப்பாகக் கொண்டு செல்ல நவீன விவசாய முறைகளோடு கூடிய இயற்கை விவசா யத்தினையும் பின்பற்றி இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட் டன.

பயிர்ச்செய்கையின் போது பயிர்களுக்கு ஏற்படும் நோயினைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள், பூச்சிநாசி னியை விசிறும் போது கவ னிக்க வேண்டிய விடயங் கள் உள்ளிட்டவை விரி வாக கலந்துரையாடப்பட் டன.

இக்கலந்துரையாடலில் மாவட்ட விவசாயப் பணி ப்பாளர் மற்றும் துறைசார் திணைக்கள அதிகாரிக ளும் கலந்து கொண்டிரு ந்தமை குறிப்பிடத்தக் கது. (ஙி-5-6-33)



மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் 141 ஆவது ஜனன தின நினைவேந்தல் யாழ். மருதடி வீதியில் உள்ள இந்திய துணைத்தூதரகத்தின் அலுவல கத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான சிங்கள மொழி போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி எஸ்.ஜதுசிகா முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். (படம்:-மகாலிங்கம்)

# பட்டப்போட்டி திருவிழா

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வல்வை விக் னேஸ்வரா சனசமூக சேவா நிலையம் மற்றும் வல்வை உதயசூரியன் கழகம் இணை ந்து நடத்தும் மாபெரும் விநோத பட்டப்போட்டித் திரு விழா எதிர்வரும் 15.01.2024 திங்கட்கிழமை பி.ப 1 மணிக்கு வல்வெட்டித்துறை மதவடி உதயசூரியன் உல்லாசக் கடற் கரையில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறி வித்துள்ளனர். (ஙி-5-6)

# வனஜீவராசிகள் திணைக்களம்

## சுவீகரிப்பு முயற்சிகளை கைவிட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

அராலி தொடக்கம் பொன் னாலை வரையான கடற் கரையோரப் பிரதேசத்தை சுவீகரிப்பதற்கு வனஜீவ ராசிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சிகளை கைவிட வேண்டும் என வடமாகாண கடற்றொழி லாளர் இணையத்தின் தலைவரும் அகில இல ங்கை தொழிலாளர் சமூக ங்களின் கட்டமைப்பின் தேசிய அமைப்பாளருமான என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார்.

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பகுதியை நம்பி நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தொழில் புரியும் நிலையில் குறி த்த பகுதியை கபளீகரம் செய்யும் முயற்சியை அர சாங்கம் கைவிட்டு விட வேண்டும் எனத் தெரி வித்தார். (ஙி-5-6-33)

# வர்த்தக நிலையத்தில் திருட்டு சந்தேகநபர் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி - புத்தூர்ப் பகுதியில் வர்த்தக நிலையத்தை உடைத்து அங் கிருந்த பொருட்களை கொள் ளையடித்துச் சென்றவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தூர் பகுதியைச் சேர்ந்த 20 - 30 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து கொள்ளையடித்த சில பொரு ட்களும் ஆபத்தை விளை விக்கும் வகையில் இருந்த வாளும் பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பிராந்திய குற் றத்தடுப்பு பிரிவு பொலிஸாரும் அச்சுவேலிப் பொலிஸாரும் இணைந்து குறித்த கைது நடவடிக்கையை முன்னெடு த்து இருந்தமை குறிப்பிடத் தக்கது. (ஙி-5-6-33)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபையின் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யா/புத்தூர் சோமஸ்கந்த கல் லூரி மண்டபத்தில் வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் இ.பகீரதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்து கொள்ளவுள் ளார். (ஙி-5-6)


## வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

## அறிவித்தல் பகிரங்க மூடிய கூறுவிலை

- வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்திற்கு சொந்தமான லொறி,கன்ரர் என்பன மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்பட உள்ளன.
- மூடிய கூறுவிலை மூலம் விற்பனைக்கு விற்கப்படும் வாகனத்திற்கான விண்ணப்பப்படிவத்தினைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 500/-(ஐந்நூறு) செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். இப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
- அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்ட படிவத்தின் விண்ணப்பம் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- மேற்கூறிய வாகனங்களை மருதங்கேணி தெற்கு தாளையடியில் இருக்கும் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.
- பார்வையிடும் நேரம் 14.12.2023 ஆம் திகதி தொடக்கம் 28.12.2023 ஆம் திகதி வரையும் விடுமுறை நாள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர், வடமராட்சி கிழக்குப் ப.நோ.கூ.சங்கம் மருதங்கேணி தெற்கு எனும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் லொறி, கன்ரர் விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.
- இவ் மூடிய கூறுவிலைக்கான விண்ணப்பம் 14.12.2023 ஆம் திகதி தொடக்கம் 28.12.2023 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். வாகனங்களுக்கான மூடிய கூறுவிலை 28.12.2023 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு எல்லோர் முன்னிலையிலும் திறக்கப்படும்.
- லொறியினையும் கன்ரரினையும் கூறுவிலையின்படி பெற்றுக் கொள்பவர்கள் அன்றைய தினமே கூறுவிலையில் குறிப்பிடப்படும் பணத்தினை முழுமையாக செலுத்தி லொறியினையும் கன்ரரினையும் கொண்டு செல்லுதல் வேண்டும்.
- ஆரம்பவிலை - லொறி:- ரூபா 4000000.00 (நாற்பது இலட்சம்)
  கன்ரர்:- ரூபா 550000.00 (ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம்)
- கூறுவிலைகள் தனித்தனி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

தலைவர்,
வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்.

தொலைபேசி இலக்கம்
021 226 0504

(C-7893)


# பண்டி உரத்தின் அதிகபட்ச விலை அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பண்டி உரம் அல்லது எம்.ஓ.பி உரம் விற்பனை செய்யக் கூடிய அதிகபட்ச விலையை 9000 ரூபாவாக அறிவிக்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்து ள்ளார்.

விவசாய அமைச்சர் அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங் களின் தலைவர் ஜகத் பெரேராவுக்கு குறித்த ஆலோசனையை வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது, 27 ஆயிரம் மெற்றிக் தொன் பண்டி உரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்க ளிடம் உள்ளது.

இதன் காரணமாக ஒரு மூட்டை யூரியா உரம் மற்றும் பண்டி உரம் 9000 ரூபாவிற்கு விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு தெரி விக்கின்றது. (ஙி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பாரிய போராட்டம் வெடிக்கும் அபாயம்

## ஐ.எம்.எப் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கையில் பாரிய அளவில் போராட்டம் ஒன்று வெடிக்கக் கூடிய சாத்தியம் அதிகரித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பிலான மீளாய்வின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு தேர்தல்கள் காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் மறுசீரமைப்புகளுக்கு பாதிப்பு ஏற்படலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சவால்கள் ஏற்படக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கையில் மீண்டும் சமூக அமைதியின்மை மற்றும் போராட்டங்கள் வெடிக்கக் கூடிய சாத்தியங்கள் அதிக அளவில் காணப்படுவதாக சுட்டிக்காட்ட ப்பட்டுள்ளது.

வரி அறவீடு, சக்தி வளத்துறையில் விலை அதிகரிப்பு, ஊழல் மோசடிகளை தடுப்ப தற்காக போதிய அளவு நடவடிக்கை எடுக்கப்படாமை, உள்ளூர் தேர்தல் நடத்தப்படாமை உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இவ்வாறு சமூக முரண்பாடுகள் அல்லது போராட்டங்கள் வெடிக்கும் சாத்தியங்கள் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் காலம் தாழ்த்தப்படும் நிலையானது நிதித் துறையில் நம்பிக்கையீனத்தை உருவாக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் அந்நியச் செலாவணி தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சுமார் 20 ஆயிரம் பெண்கள் வன்முறைகளால் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் இவ்வருடம் 20,000 இற்கும் மேற்பட்ட பெண்கள் பல் வேறு வன்முறைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தின் சமூக மருத்துவர் ஆலோசகர் வைத்தியர் நெதாஞ்சலி மபிடிகம தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டில் கருவுற்ற பெண்கள் கூடுதலாக வன்முறைக்கு ஆளாகுவதாக தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான பாலியல், பாலின அடிப்படையிலான வன்முறைகளை தடுப்பதற்கான தேசிய செயற்றிட்டத்தின் உள்ளடக்கங்களைப் பற்றி விவாதிப்ப தற்கான ஒரு செயலமர்விலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். (நி-5-6)

# JAFFNA MEDICAL ASSOCIATION ANNUAL GENERAL MEETING -2024 NOTICE OF MEETING

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on Saturday, 3rd February 2024 at 11.00 a.m at the Nurses Training School Lecture Hall Teaching Hospital, Jaffna. for the Following purposes;

1. To receive and consider the Annual report of the committee of Management on the affairs of the company and the statement of accounts for the year ended 31st december 2023 and the report of the auditors thereon.
2. To consider any resolutions proposed by members and committee where due Notice has been given.
3. To elect the committee of management for year 2024.
4. To appoint the auditors of the association and to authorize the committee of Management to determine their remuneration.

By order of the committee of management,
Honorary Secretary,
14th December 2023.

(18214)

# புலமைப்பரிசில் பரீட்சையை இலகுபடுத்தும் திட்டம் விரைவில்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டு முதல் தற்போதுள்ள கல்வி முறையில் பல முக்கிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜயந்த தெரிவித்துள்ளார்.



இதன்படி தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை தற்போதைய நிலைமையை விட இலகுவாக்க எதிர்பார்த்துள்ளதாகவும், மாணவர்களின் எழுத்தறிவு மற்றும் எண்ணியல் திறன்களை அளவிடுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை இங்கு வழங்கிய அமைச்சர், எதிர்காலத்தில் பரீட்சையில் 100 வீத சித்திகளைப் பெற்று மாணவர்கள் மதிப்பீடு செய்யப்படமாட்டார்கள் என்று குறிப்பிட்டார்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 30 வீத புள்ளிகளைப் பெறுவதோடு 4ஆம் மற்றும் 5 ஆம் தரங்களில் வகுப்பறையில் நடத்தப்பட்ட மதிப்பீட்டில் பெறப்பட்ட மதிப்பெண்களில் 30 வீதமான மதிப்பெண்களை மாணவர்கள் பெற வேண்டும் எனவும், இதற்காக தொடர்ச்சியான வருகைப் பதிவை மாண வர்கள் பெற வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஆசிரியர்கள் பாரபட்சமாக நடந்து கொள்வார்கள் என்று சில பெற்றோர்கள் விமர்சிக்கலாம்.

ஆனால் அவ்வாறான சூழ்நிலைகளுக்கு இடமில்லை என்றும் எல்லாவற்றிற்கும் மேலாக பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஆசிரியர்கள் மீது தெளிவான நம்பிக்கையை ஏற்படுத்துவது முக்கியம் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

பாடசாலைகளில் வகுப்பறைகளில் மாணவர்கள் எவ்வாறு மதிப்பிடப்படுகிறார்கள் என்பதை பாடசாலை வாரியங்கள் கண்காணிக்கின்றன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். சிறந்த கல்வியைக் கொண்ட நாடாக அங்கீகரிக்கப்பட்ட பின்லாந்தில் கூட 9 ஆம் வகுப்பு வரையிலான பாடசாலைகளிலும் வகுப்பறை அளவிலான மதிப்பீடுகள் மட்டுமே பயன்படுத்தப் படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்திருந்தார். (நி-5-6)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2024 ஆம் ஆண்டிற்கான 1ஆவது பகிரங்க ஏல அறிவித்தல்

| தொ.இல | விபரம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | |
| 1 | உடுவில் கீளிச் சந்தை | 156,940.00 | |
| 2 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 371,565.00 | 250.00 |
| 3 | முட்டைக் கடை இல 04 | 47,500.00 | 250.00 |
| 4 | கோழி உரித்தல் கடை இல 05 | 238,025.00 | 250.00 |
| 5 | கோழிக்கடை இல 06 | 190,000.00 | 250.00 |
| 6 | பொது மலசலகூடம் | 58,670.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | |
| 1 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 47,645.00 | |
| 2 | இணுவில் கோழிறைச்சிக்கடை | 276,450.00 | 250.00 |
| 3 | இணுவில் சந்தை | 66,880.00 | |
| 4 | மல்வம் சந்தை | 57,475.00 | |
| 5 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 351,975.00 | 250.00 |
| | ஏழாலை உப அலுவலகம் | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 38,475.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு பொதுச்சந்தை | 593,755.00 | |

காலம் :- 19.12.2023ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு.
இடம் :- தலைமை அலுவலகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

குறிப்பு: - ஏலத்தில் பங்குபற்றும் கேள்விதாரர்கள் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிப்பதுடன் ரூபா. 1,000.00 செலுத்தி கலந்து கொள்ள முடியும். தெரிவு செய்யப்படும் குத்தகைக்காரர் குத்தகைத்தொகையின் ½ பங்கு மற்றும் 3 மாத வாடகை என்பவற்றினை 27.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

திருமதி. சாரதா உருத்திரசம்பவன்,
செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
(சி-7888) 14.12.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மன்னிப்பு கோரிய பிரிட்டன் பிரதமர்

(லண்டன்)
பிரிட்டனில் கொரோனாக் காலத்தில் உயிரிழந்த குடும்பங்களிடம் பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் மன்னிப்பு கோரியுள்ளார்.

உலகை முடக்கிய கொரோனா பேரிடர் காலத்தில் முழு முடக்கம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய முடிவுகளை எடுத்த அப்போதைய பிரதமர் போரிஸ் ஜோன்சன் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

அந்த விசாரணையில் தற்போதைய பிரதமர் ரிஷி சுனக் கடந்த திங்கட்கிழமை ஆஜராகி விளக்கமளித்தார். கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த போரிஸ் ஜோன்சன் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளுக்கு ரிஷி சுனக் ஆதரவு தெரிவித்தார்.

மேலும், கொரோனா பேரிடர் காலத்தில் அரசு எடுத்த கடுமையான முடிவுகளால் பாதிக்கப்பட்டவர்களிடமும் கொரோனாவால் சொந்தங்களை இழந்த குடும்பத்தினரிடமும் மன்னிப்பு கோருகிறேன்.


கொரோனா காலக்கட்டத்தில் பல்வேறு படிப்பினைகளைக் கற்றுக் கொண்டுள்ளோம். அது வருங்காலத்தில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும் என்றும் பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்தார்.(நி-5-6)

## அமெரிக்க ஜனாதிபதியை சந்தித்த ஜெலென்ஸ்கி

(வோஷிங்டன்)
உக்ரைனுக்கு மேலதிக உதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி அமெரிக்காவை வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ஜோ பைடன், உக்ரைன், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கியை வெள்ளை மாளிகைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்த நிலையில் ஜெலன்ஸ்கி அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

61 பில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான இறுதி முயற்சிகளை அவர் இந்த சந்திப்புகளின் போது மேற்கொண்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.()



## மனிதாபி...
## ஐ.நா ெ...
### ஆதரவாக 153 ...

(நியூயோர்க்)
இஸ்ரேல்-ஹமாஸ் போ... வதற்கான உலக நாடு... காசாவில் மனிதாபிமான ... பொதுச்சபையில் நிறைவே...

காசாவில் அவசர போர் நிறுத்தம் ஒன்றை கோரும் தீர்மானம் தொடர்பில் 193 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐ.நா பொதுச்சபையில் நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடைபெற்றது

அவசர போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் ஐ.நா பாதுகாப்புச் சபை தீர்மானத்தை நிராகரித்து அமெரிக்கா வெள்ளிக்கிழமை 'வீட்டோ' அதிகாரத்தை பயன்படுத்திய நிலையில் ... சபையில் ... இடம்பெற்ற...

193 உ... கொண்ட ... பொதுச்சபை... தீர்மானத்... 153 வாக்... பட்டன.

அமெரி... ஒஸ்திரியா... லைபீரியா... ஷியா, நவ... கினியா, ப...

## ஆப்கானிஸ்தானில் தொடரும் நிலநடுக்கம்

(காபூல்)
ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து மூன்றாவது நாளாக நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.


ஆப்கானிஸ்தானில் மூன்றாவது நாளாக தொடரும் நிலநடுக்கம் ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் காலை 5.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகத் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை 4.8 ரிக்டர் அளவிலும் நேற்று முன்தினம் 4.4 ரிக்டர் அளவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் 5.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி ஆப்கானிஸ்தானின் ஹெராத் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 4,000 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன் பல்லாயிரக் கணக்கானோர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

### 'சர்வதிகாரத்திற்கு இடமில்லை'

## முழக்கமிட்டவாறு இந்திய பாராளுமன்றில் புகைக்குண்டு வீச்சு



(டில்லி)
இந்தியப் பாராளுமன்ற மக்களவையில் அத்துமீறி நுழைந்த நபர்கள் புகைக் குண்டு வீசிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பாராளுமன்ற தாக்குதல் நினைவு தினத்தில் இந்த சம்பவம் நடந்திருப்பதால் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்திய பாராளுமன்றம் தாக்கப்பட்டதன் 22 ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்று, தொடர்புடைய தாக்குதலில் கொல்லப்பட்ட வீரர்களுக்கு பிரதமர் மோடி, மக்களவை சபாநாயகர், மாநிலங்களவைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எம்.பி.கள் அஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கியது. அப்போது,மக்களவையில், பார்வையாளர்கள் மாடத்திலிருந்த ஒரு இளைஞர் மற்றும் ஒரு இளம் பெண் திடீரென அவைக்குள் குதித்துள்ளனர்.

அவர்கள் கையில் மஞ்சள் நிறத்தில் புகையை உமிழக்கூடிய பொருளை வைத்திருந்துள்ளனர். மேலும் சர்வாதிகாரத்திற்கு இங்கு இடமில்லை என்றும் முழக்கமிட்டுள்ளனர். அந்த மஞ்சள் நிற புகை மொத்தமாக அவை முழுவதும் பரவியது.

இந்தச் சம்பவம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. உடனடியாக பாதுகாப்பு பணியில் இருந்த காவலர்கள் அந்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில் தொடர்புடைய சம்பவமானது மொத்தமாக பாதுகாப்பு குறைப்பாடு காரணமாக நடந்துள்ளது என்று உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

## அரசியல் நிலைப்பாட்...
## நெதன்யாகு மாற்ற வேண்...
### ஜோ பைடன் சுட்டிக்காட்டு

(வோஷிங்டன்)
காசா மீது இஸ்ரேல் கண் மூடித்தனமாக குண்டு வீசித்தாக்குதல் நடத்தி வருகின்ற நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும் என ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பான நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது,

"காசா மீது இஸ்ரேல் கண்மூடித்தனமாக குண்டு வீசித்தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ் படை...



...யினர் மீதான தாக்குதலில், பாலஸ்தீன மக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். இதேநிலை தொடர்ந்து நீடித்தால் இஸ்ரேல் மிக கடினமான நிலையை சந்திக்க நேரிடும்.

இஸ்ரேல்... ஆதரவை ... கிறது. அமெ... ஆலோசகர... சல்லிவன், ... சென்று பே... நடத்த தயார...

இஸ்ரேலு... காத்துக்கொ... உண்டு ... நம்புகிறோம்... வித்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாபிமான போர் நிறுத்த தீர்மானம்

# ... பொதுச்சபையில் நிறைவேற்றம்

## 153 நாடுகள் வாக்களிப்பு

**...மாஸ் போரை முடிவுக்குக் கொண்டு வரு ...க நாடுகளின் வலுவான ஆதரவோடு ...ாபிமான போர் நிறுத்தத் தீர்மானம் ஐ.நா ... நிறைவேறியுள்ளது.**




நிலையிலேயே பொதுச் சபையில் அவசரக் கூட்டம் இடம்பெற்றது.

193 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் குறித்த தீர்மானத்திற்கு ஆதரவாக 153 வாக்குகள் அளிக்கப் பட்டன.

அமெரிக்கா, இஸ்ரேல், ஒஸ்திரியா, குவாத்தமாலா, லைபீரியா, மைக்ரோனேஷியா, நவ்ரு, பப்புவா நியூ கினியா, பராகுவே ஆகிய 10 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்துள்ளன.

இதேநேரம் குறித்த வாக்கெடுப்பில் 23 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பதோடு போர் நிறுத்தத்திற்கான தீர்மானம் வெற்றி பெற்றதை அடுத்து தூதுவர்கள் கைதட்டி ஆரவாரமும் செய்திருந்தனர்.

இந்நிலையில் அனைத்துத் தரப்பினரும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் தமது கடமைகளுக்கு இணங்க வேண்டுமெனும் பொதுச்சபையின் கோரிக்கைக்கையை இந்தத் தீர்மானம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

எனினும் பொதுச்சபையில் கடந்த ஒக்டோபரில் இடம்பெற்ற வாக்கெடுப்பில், "மோதலை முடிவுக்குக் கொண்டுவர வழிவகுக்கும் அவசரமான, நீடித்த மற்றும் நிலையான மனிதாபிமான போர் நிறுத்தம்" ஒன்றுக்கு அழைப்பு விடுக்கும் தீர்மானத்திற்கு 121 நாடுகள் ஆதரவாகவும் 14 நாடுகள் எதிராகவும் வாக்களித்ததோடு 44 நாடுகள் வாக்களிப்பை தவிர்த்திருந்தன. (நி-5-6)

## ...பாட்டை ...வேண்டும்

...ட்டு



இஸ்ரேல் உலகளாவிய ஆதரவை இழந்து வருகிறது. அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகரான ஜேக்கப் சல்லிவன், இஸ்ரேல் சென்று பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளார்.

இஸ்ரேலுக்குத் தற்காத்துக்கொள்ள உரிமை உண்டு என நாங்கள் நம்புகிறோம்" என்று தெரிவித்துள்ளார். (நி-5-6)

## காசாவில் 25 மருத்துவமனைகளின் செயற்பாடுகளை முடக்கிய இஸ்ரேல்

(காசா)

காசாவில் உள்ள 36 மருத்துவமனைகளில் 25 மருத்துவமனைகளின் செயல்பாடுகள் இஸ்ரேல் தாக்குதலால் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சியுள்ள 11 மருத்துவமனைகளும் ஓரளவு மட்டுமே செயற்படுவதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து காசா மீது கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இஸ்ரேல் இராணுவம் போர் தொடுத்து வருகிறது.


அந்த வகையில் கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக காசாவை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் ஹமாசை ஒழிக்கும் வரையில் எத்தனை மாதங்கள் ஆனாலும் போரை தொடருவோம் என சூளுரைத்துள்ளது.

மருத்துவமனைகள் குறித்து ஐ.நா பத்திரிகையாளர்கள் சந்திப்பில் உலக சுகாதார அமைப்பின் ரிச்சர்ட் பீப்பர்கார்ன் கூறுகையில்,

"காசாவிலுள்ள 3 இல் ஒரு பகுதிக்கும் குறைவான மருத்துவமனைகள் தான் ஓரளவுக்கு இயங்கி வருகின்றன. வெறும் 66 நாட்களில் காசாவின் சுகாதாரக் கட்டமைப்பு சீர்குலைக்கப்பட்டுவிட்டது.

36 மருத்துவமனைகளில் 25 மருத்துவமனைகள் செயற்பட முடியாமல் முடங்கியுள்ளன. வடக்கு காசாவில் ஒன்று, தெற்கு காசாவில் 10 என மொத்தம் 11 மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன எனத் தெரிவித்தார். (நி-5-6)

## காசாவில் கட்டடங்கள் இடிப்பு- ஐ.நா சாடல்



(காசா)

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள அனட்டா மற்றும் மர்ஜ் நஜாவில் பாலஸ்தீனியர்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் இஸ்ரேலியப் படைகளால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதாக ஐ.நா குற்றம் சாட்டியுள்ளது.

மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்புக்கான ஐ.நா அலுவலகத்தின் சமீபத்திய புள்ளிவிபரங்களின் படி மொத்தமாக இந்த ஆண்டு மட்டும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பாலஸ்தீனியர்களுக்குச் சொந்தமான சுமார் 1,001 கட்டடங்கள் இடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறைந்தது 1,870 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் மனிதாபிமான விபகாரங்களின் ஒருங்கிணைப்புக்கான ஐ.நா அலுவலகத்தின் சமீபத்திய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
1942 - 10 - 26



இறப்பு
2023 - 12 - 01

## அமரர்.திருமதி. தவமணி பரமு

யாழ்.உடுப்பிட்டி நாவலடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Vitry-sur-seine, Paris ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி பரமு அவர்கள் *01.12.2023* வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர், தில்லைச்சியம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற கந்தன், சீதை தம்பதிகளின் பாசமிகு மருமகளும், பரமு அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் பரமதாஸ் (ஜேர்மனி), பரமராணி (இலங்கை), பாக்கிய லக்சுமி(குஞ்சம்மா -கனடா), பரமநாதன் (கடவுள் -சுவிஸ்), புஸ்பலதா (பிரான்ஸ்), சூரியகலா(கனடா), திருச்செல்வ ராசா(திருவன்-இலங்கை), வனிதா (சுவிஸ்), ஜெனிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகந்தி, தவராசா, சுந்தரலிங்கம், சுஜீபா, சிவநேசன், மனோகரன், ஜெஸ்மின், மணிவண்ணன், ரகுதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியை இலங்கை நேரப்படி 1.30 மணிமுதல் நாவலடி,உடுப்பிட்டியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வு https://m.youtube.com/watch?v=ejszveesgQ எனும் வலைத் தளத்தில் நேரடிஒலிபரப்பு செய்யப்படும்.

**கிரியை:**
Thursday, 14 Dec 2023
9.30Am -11.30Am
FUNESPACE
49-51 Quai Jules Guesde,
94400 Vitry-Sur-Seine,

**தகனம்:**
Thursday, 14 Dec 2023 1.30pm -2.30Am
Crematorium Champigny
560 Avenue Maurice Thorez, 94500
Champigny-sur- Marne, France.

நாவலடி,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 450 | 300 | 450 |
| உருளைக்கிழங்கு | 300 | 220 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 1200 | 1300 | 1300 | 1000 |
| தக்காளி | 750 | 700 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 100 | 150 |
| கோவா | 400 | 400 | 380 | 500 |
| கரட் | 400 | 450 | 450 | 500 |
| பூசணி | 180 | 180 | 150 | 250 |
| புடோல் | 300 | 300 | 240 | 300 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 450 | 600 |
| பெரிய வெங்காயம் | 350 | 450 | 400 | 500 |
| பாகற்காய் | 800 | 700 | 400 | 800 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 200 |
| பயற்றங்காய் | 400 | 700 | 350 | 600 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 300 | 600 | 500 | 600 |
| கறிமிளகாய் | 600 | 800 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | - | — | 2000 |
| போஞ்சி | 350 | 500 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 500 | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 150 | 200 |
| தேசிக்காய் | 800 | 600 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 500 | 600 | 450 |
| வெங்காயப்பூ | — | - | — | - |
| முள்ளங்கி | 200 | 200 | — | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 100 | 35 | 50 | 80 |
| ஈரப்பலா | 200 | 150 | 150 | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2989

### பவித்திரன்

வீடு கட்டும் பொழுது உங்கள் சமையலறையில் இது போல செய்யலாமே.



செய்யலாம்தான்... ஆனா மசாலா அரைச்சிட்டு நான் எப்ப ஆபிஸ் போறது.


### பிரதீப்

நடந்து கிட்டு இருக்கிற 2023 முடிய போவதை பற்றி ஏதாவது சொல்ல விரும்புறீங்களா?




### சரணியா

இந்த ஊரில் தங்க வீடு கிடைக்குமா?



கிடைக்காது, கூரை வீடு, ஓட்டு வீடு, மாடிவீடுதான் கிடைக்கும்.

### யேனுசா

நல்லவங்கள ஆண்டவன் ரொம்ப சோதிப்பான்.




நல்ல entertainment ஆ இருக்குனு அவங்களையே திரும்பவும் சோதிப்பான்.

### விமேஸ்

மூன்று எழுத்தில் ஒரு விங்கின் பெயர்?
அதில் இரண்டாவது எழுத்தை எடுத்தால் குழந்தைகளுக்கு ரொம்ப பிடிக்கும்?
அதில் கடைசி எழுத்து மாதத்தின் பெயர்..?
மூன்றுக்கும் ஒரே விடை...?




### மிதுலா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - சிங்கப்பூர் உடனான உறவு வலுப்பெறும்
## சிங்கப்பூர் பிரதமர்

(கொழும்பு)

சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையில் தற்போதுள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூக உறவுகளை வலுப்படுத்த சிங்கப்பூர் உறுதிபூண்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் லீ சியென் லொங்க் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க மேற்கொண்ட சிங்கப்பூருக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இடம்பெற்ற இருதரப்பு கலந்துரையாடல்களைப் பாராட்டி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள விசேட கடிதத்திலேயே சிங்கப்பூர் பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது "இரு நாடுகளுக்கிடையிலான ஆக்க பூர்வமான கலந்துரையாடல்களின் அனுகூலமான முடிவுகளுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான தனது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்யும் வகையில், இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை விரைவில்மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளேன்" என குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# வடக்கின் 4 மாவட்டங்களில் 'தத்தி' நோய்த்தாக்கம் வீரியம்

(மன்னார்)

**நெற் பயிர்ச்செய்கையில் வெண்முதுகு தத்தி நோய்த்தாக்கத்தால் வடக்கின் 4 மாவட்டங்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக வடபிராந்திய விவசாய அபிவிருத்தி நிலைய உதவிப்பணிப்பாளர் எஸ்.ராஜேஷ் கண்ணா தெரிவித்தார்.**

வட மாகாண ரீதியில் நெற்பயிரில் ஏற்படும் பாரிய நோய் தாக்கமான "வெண்முதுகு தாவரத்தத்தியின்" தாக்கம் தொடர்பாக நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்டெயர் நிலப்பரப்பும் கிளிநொச்சி மாவட்டத்தில் 800 ஹெக்டெயர் நிலப்பரப்பும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 650 ஹெக்டெயர் நிலப்பரப்பும் வவுனியா மாவட்டத்தில் 700 ஹெக்டெயர் நிலப்பரப்புமாக பெரும் பரப்பு வயல் நிலங்கள் பாதிப்படைந்துள்ளன. மன்னாரை பொறுத்தவரையில் மிக குறுகிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றை கட்டுப்படுத்த விவசாயிகள் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (நி-5-6-285)

# வடமாகாண தென்னை முக்கோண வலய செயற்றிட்ட கலந்துரையாடல்

(தருமபுரம்)

வடக்கில் இராணுவத்தினரிடமும் வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் தரிசு நிலங்கள் உள்ளடங்கலாக ஏறத்தாழ 40000 ஏக்கர் காணிகள் உள்ளன எனவும் குறித்த காணிகளை தென்னை பயிர்ச்செய்கைக்காக விடுவித்தால் 66.35மில்லியன் தேங்காய்கள் வழங்க முடியும். இதனால் 5828மில்லியன் ரூபாய் தேசிய வருமானமாகவும் அதிக இலாபம் ஈட்டலாம் என வடமாகாண தென்னை அபிவிருத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் தென்னை பயிர்ச்செய்கை அதிகளவில் மேற்கொள்ள எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக காட்சிப்படுத்தப்பட்டு கள உத்தியோகத்தர்களிடம் அதற்கான தீர்வுகளும் கேட்டறியப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தென்னை பயிர்ச்செய்கை சபையின் ஏற்பாட்டில் வடமாகாண தென்னை முக்கோண வலய செயற்றிட்ட ஒன்று நேற்று பனை தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் யாழ்.பிராந்திய காரியாலய கேட்போர் மண்டபத்தில் இடம் பெற்றது. (நி-5-6-316)

# நோய்த்தாக்கம் தொடர்பில் ஆராய்ந்த விவசாய குழுவினர்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டபெரும் போக நெற்செய்கையில் ஏற்பட்டுள்ள நோய்த்தாக்கங்களை நேரில் சென்று ஆராய்வதற்கான கிளிநொச்சிமாவட்ட விவசாய பணிப்பாளர் குழுவினர் நேற்று கள விஜயம்மேற்கொண்டனர்.

வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர் போன்ற பகுதிகளில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நோய்த்தாக்கம் தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டு



நோய்த்தாக்கங்களுக்கான தீர்வினையும் அதற்கான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளதுடன் காலாவதி திகதிகளை விவசாயிகள் சரியாக உறுதி செய்த பின்னர் தங்களது பயன்பாட்டிற்கு கிருமிநாசினிகளை கொள்வனவு செய்யுமாறும் அத்துடன் நோய்த்தாக்கங்கள் ஏற்படும் பொழுது அருகில் உள்ள கமநலசேவை விவசாய போதனா ஆசிரியரின் ஆலோசனைகளுக்கு அமைவாகவே கிருமிநாசினிகளைப் பயன்படுத்த வேண்டும்எனவும்அறிவுறுத்தப்பட்டது. (நி-5-6-316)

# முல்லை.இ.போ.ச ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு இலங்கை போக்குவரத்துசபை சாலை ஊழியர்கள் நேற்று முன்தினம் மாலை தொடக்கம் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் தனியார் பேருந்து குழுவினரால் தாக்கப்பட்ட எமது காப்பாளருக்கு நீதி வழங்கப்பட வேண்டும் எனவும் நேர அட்டவணை பங்கீட்டு நியதிச்சட்டத்தின் அடிப்படையில் 60: 40 என்ற விகிதத்தில் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து தொழில் நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.



குறித்த இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா, கிளிநொச்சி, காரைநகர், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய சாலைகளில் இருந்து முல்லைத்தீவிற்கான போக்குவரத்துச் சேவை நேற்று இடம் பெறாமல் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. (நி-5-6-299)

# மின்சாரம் தாக்கியதில் 4 வயது சிறுவன் பலி

(கொழும்பு)

குருணாகல் - மஹவ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மஹாவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் குருணாகல் - அம்பன்பொல பிரதேசத்தை சேர்ந்த 4 வயதுடைய சிறுவனாவர்.

இவர் தனது சகோதரனால் யானைகளுக்காக வயலில் பொருத்தப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கியே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)



ஒட்டுசுட்டான் பிரதேச செயலகமும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஒட்டுசுட்டான் பண்பாட்டுப்பேரவையும் இணைந்து நடத்திய ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பெருவிழா நேற்று இடம்பெற்றது.

(படம்: சதீஸ்)



வவுனியா மாவட்ட சாரண சங்கத்தின் நிர்வாகத் தெரிவும் மாவட்ட ஆணையாளர் தெரிவும் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 353



### இருபத்துநான்காம் அத்தியாயம்
### அனலில் இட்ட மெழுகு

கிளி 'கிறீச்'சிட்ட சத்தமும் தாதிப் பெண் பயத்துடன் கூவிய சத்தமும் கலந்து வந்து நந்தினியையும் கந்தன் மாறனையும் திடுக்கிடச் செய்தன. கந்தன்மாறன் திரும்பிப் பார்த்துப் பழுவேட்டரையர் வருகிறார் என்று அறிந்ததும் கதி கலங்கிப் போனான். சற்றுமுன்னால் அவன் 'பழுவேட்டரையரை எனக்கும் பிடிக்கவில்லை' என்று சொன்னது அவர் காதில் விழுந்திருக்குமோ என்ற எண்ணம் உதயமாயிற்று. அதை விடப் பீதிகரமான எண்ணம், நந்தினியையும் தன்னையும் பற்றி அவர் ஏதேனும் தவறாக எண்ணிக் கொள்வாரோ என்ற நினைவு, அவனுக்குத் திகிலை உண்டாக்கிற்று. கிழப்பருவத்தில் கல்யாணம் செய்து கொண்டவர்களின் போக்கே ஒரு தனி விதமாக இருக்குமல்லவா? ஆகையினாலேயே அவர் அவ்வளவு கோபமாக வந்து கொண்டிருக்க வேண்டும்? வந்து என்ன செய்யப் போகிறாரோ தெரியவில்லை. எதற்கும் சித்தமாயிருக்க வேண்டியதுதான்.

திடீரென்று எதிர்பாராமல் வந்தவரைக் கண்டு, தாதிப் பெண் திடுக்கிட்டு விலகி நின்றாள். அங்கே மண்டபத்தின் விட்டத்திலிருந்து தொங்கி ஆடிய ஒரு முக்கோணத்தில் ஒரு பெரிய கிளி ஒன்று சங்கிலியால் பிணைத்து வைக்கப்பட்டிருந்தது. வந்த வேகத்தில் பழுவேட்டரையர் தம்மையறியாமல் அந்தக் கிளியைக் கையினால் பற்றினார். அவருடைய மனத்திலிருந்த வேகம் அவருடைய கையின் வழியாகப் பாய்ந்தது. கிளியின் சிறகுகள் சடசடவென்று அடித்துக் கொண்டன. பழுவேட்டரையரின் கொடூரமான பிடியைத் தாங்க முடியாமல் கிளி 'கிறீச்'சிட்டது.

இவ்வளவு ஒரு நொடிப் பொழுதில் கந்தன்மாறன் மனத்தில் அலை எறிந்த சிந்தனைகள். ஆனால் அவனுக்கு அன்று ஒரு பெரிய அதிசயத்தைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அவன் நினைத்ததற்கெல்லாம் மாறாக அந்த அதிசயம் நடந்தது. பழுவேட்டரையர் அருகில் நெருங்கியதும் நந்தினி முகமலர்ந்து அவரைத் தன் கரிய விழிகளால் பார்த்து, "நாதா! எங்கே தாங்கள் திரும்பி வருவதற்கு அதிக நாள் ஆகிவிடுமோ என்று பார்த்தேன். நல்ல வேளையாக வந்துவிட்டீர்கள்!" என்றாள்.

அவளுடைய முகத்தைப் பார்த்து அந்தக் குரலையும் கேட்டதும் பழுவேட்டரையரின் கோபாவேசமெல்லாம் பறந்துவிட்டது. அனலில் இட்ட மெழுகைப்போல் உருகிப் போனார். அசட்டுச் சிரிப்பு ஒன்று சிரித்து, "ஆமாம் போன காரியம் முடிந்து விட்டது திரும்பி விட்டேன்" என்றார்.

பிறகு கந்தன்மாறனைப் பார்த்து, "இந்தப் பிள்ளை இங்கே என்ன செய்கிறான்? ஏதாவது காதற்கவிதை புனைந்து கொண்டு வந்து கொடுத்தானோ?" என்று கேட்டுவிட்டுத் தம்முடைய பரிகாசத்தைக் குறித்துத் தாமே சிரித்தார்.

கந்தன்மாறனுடைய முகம் சிவந்தது. ஆனால் நந்தினி பழுவேட்டரையரை விட அதிகமாகச் சிரித்துவிட்டு "இவருக்குக் காதலும் தெரியாது. கவிதையும் தெரியாது. சண்டை போட்டுக் காயமடையத்தான் தெரியும். நல்ல வேளையாகக் காயம் ஆறிவிட்டது. ஊருக்குப் போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்!" என்றாள்.

"இந்தக் காலத்துப் பிள்ளைகளின் வீரத்தைத்தான் என்னவென்று சொல்லுவது? இருபத்துநாலு யுத்தகளங்களில் நான் அறுபத்துநாலு காயங்கள் அடைந்தவன். ஆனால் ஒரு தடவையாவது படுக்கையில் படுத்ததில்லை. இவனுக்குக் காயம் குணமாக ஒரு பட்சத்துக்கு மேலாகியிருக்கிறது. ஆனால் என் காயங்களெல்லாம் மார்பிலும் தோளிலும் தலையிலும் முகத்திலும் ஏற்பட்டவை. இந்தப் பிள்ளை முதுகிலே காயம் பட்டவன் அல்லவா? அதனால் இவ்வளவு நாள் ஆகிவிட்டது. நியாயந்தான்!" என்று கூறிப் பரிகாசச் சிரிப்புச் சிரித்தார்.

(தொடரும்..)



# சிறுவர் அரங்கம்

## நெய் டப்பாவில் பொற்காசு



தன்னுடைய தர்பாருக்கு விசாரணைக்காக வரும் வழக்குகளில் பலவற்றை அக்பர் பீர்பாலிடம் ஒப்படைப்பதுண்டு. ஒருநாள், அக்பரின் அனுமதியுடன் தர்பாருக்கு வந்த மதுசூதன் என்ற வியாபாரி அவரை வணங்கியபின், "பிரபு! என் பெயர் மதுசூதன். நான் ஒரு நெய் வியாபாரி. ஒரு மாதத்திற்கு முன் அஸ்லாம் கான் எனும் என் நண்பன் என்னிடம் வந்து 20 முகராக்கள் கடன் கேட்டான். பதினைந்து நாட்களுக்குள் திருப்பித் தருவதாகச் சொன்னவன் இதுவரை அதைத் திருப்பித் தரவேயில்லை" என்றார்.

"நீ கொடுத்த கடனுக்கு அவனிடம் இருந்து பத்திரத்தில் கையெழுத்து வாங்கியிருக்கிறாயா?" என்று அக்பர் கேட்டார்.

"அஸ்லாம்கானை எனக்கு இருபது வருடங்களாகத் தெரியும். அதனால் கடன் பத்திரத்தில் கையெழுத்து வாங்கவில்லை. ஆனால் நான் சொல்வது உண்மை!" என்றார்.

உடனே பீர்பாலின் பக்கம் திரும்பிய அக்பர், "பீர்பால்! இந்த வழக்கை நீ கவனிக்கிறாயா?" என்று கேட்டார். அதற்குச் சம்மதித்த பீர்பால் மாலையில் மதுசூதனைத் தன் வீட்டில் சந்திக்கச் சொன்னார். மாலையில் மதுசூதன் வீட்டிற்கு வந்ததும் அவரை நடந்தவற்றை மீண்டும் விளக்கச் சொன்னார். அவர் சொன்னதெல்லாம் கேட்ட பிறகு, "ஆக, நீங்கள் அஸ்லாமுக்குக் கடன் கொடுத்ததற்கு அத்தாட்சி எதுவும் இல்லை. சாட்சிகளும் இல்லை" என்றார் பீர்பால்.

அதற்கு மதுசூதன், "ஆமாம்!" என்றார். அவருக்கு தைரியமளித்து அனுப்பிய பின், பீர்பால் அஸ்லாம் கானைத் தன்னை சந்திக்கும்படி தகவல் அனுப்பினார். சற்று நேரத்தில் நல்ல உடை அணிந்த வாட்டசாட்டமான ஓர் ஆள் பீர்பாலைத் தேடி வந்தார். "நான் தான் அஸ்லாம் கான். என்னை வரச்சொன்னீர்களாமே!" என்றார்.

"உங்களைத் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கவும். உங்கள் மீது ஒருவர் புகார் கொடுத்திருக்கிறார். அதைப்பற்றி உங்களை விசாரிக்க வேண்டும்" என்றார் பீர்பால். "என் மீது புகாரா? நான் மிகவும் நாணயமானவன். என் மீது புகார் வர சிறிதும் வாய்ப்பு இல்லையே!" என்றான் அஸ்லாம்.

மதுசூதன் அவர் மீது தொடுத்து உள்ள வழக்கைப்பற்றி பீர்பால் விபரித்ததும் "நான் ஏன் அவரிடம் இருந்து கடன் வாங்க வேண்டும்? எனக்கு ஏராளமாக சொத்து இருக்கிறது. நெய் வியாபாரத்தில் நல்ல லாபமும் சம்பாதிக்கிறேன். மதுசூதன் என் மீது வீணாகப் பழி சுமத்துகிறான்" என்றான் அஸ்லாம்.

"இருக்கலாம். ஆனால் வழக்கு என்று வந்துவிட்டபின் அதை நன்கு விசாரிக்க வேண்டியிருக்கிறது" என்றார் பீர்பால். "அல்லா எனக்கு ஏராளமான செல்வத்தை வழங்கி இருக்கிறார். எனக்கு யாரிடமும் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை" என்று அஸ்லாம் அடித்துக் கூறினார்.

உடனே பேச்சை மாற்றிய பீர்பால் "அஸ்லாம்! உங்களால் எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?" என்றார்.

"சொல்லுங்கள்" என்று அஸ்லாம் கூற, "கிராமத்திலுள்ள என் நண்பனிடம் எனக்கு ஒரு டின் நெய் அனுப்பச் சொன்னேன். அவன் இரண்டு டின் அனுப்பி விட்டான். ஒரு டின் நெய்யை எங்காவது விற்று விட்டால் நல்லது" என்றார் பீர்பால்.

"அதை என்னிடம் கொடுங்கள். அதை விற்றுப் பணத்தை உங்களுக்கு அனுப்புகிறேன்" என்றான் அஸ்லாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தின் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர்.
*– லா புரூயர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மனப்பாங்கில் மாற்றம் ஏற்படாத மக்கள் சமூகம்

சமகாலத்தில் அறிவு, திறன், மனப்பாங்கு என்பது பற்றி அறியாதவர்கள் இருக்க முடியாது.

அதிலும் ஆசிரியர் தொழிலில் இருப்பவர்களின் மகுடவாசகமே இதுதான் எனலாம்.

அறிவு, திறன், மனப்பாங்கு என்பன ஒரு நிலைப்படாதவரை அதுபற்றிய பேச்சுக்கள் பிரயோசனமற்றவை.

ஆம், எவ்வளவுதான் அறிவு இருந்தாலும் அந்த அறிவு மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தத் தவறுமாயின், அந்த அறிவால் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது.

அதனாலன்றோ, வள்ளுவப் பெருமான்
*அரம்போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்*
*மக்கட் பண்பு இல்லாதவர்*
என்றுரைத்தார்.

ஆம், எவ்வளவுதான் கூர்மையான அறிவு இருந்தாலும் அவர்களிடம் மக்கட் பண்பு இல்லையாயின், அந்த அறிவு ஓரறிவு கொண்ட மரத்துக்குச் சமமானதென்பது வள்ளுவரின் முடிவு.

இங்குதான் மக்கட் பண்பு என்பது மனப்பாங்கைக் குறிப்பதென்றுணர்தல் வேண்டும்.

ஆக, எண்ணரிய நூல்களைக் கற்று அறிவைப் பெருக்கினாலும் அந்த அறிவு மக்கட் சமூகத்துக்குப் பயன்படவேண்டுமாயின், அறிவுடையாரின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

இங்குதான் அறிவுடைய தமிழ்ச் சமூகம் என்று நாம் எங்கள் தொடர்பில் பெருமைப்பட்டுக் கொண்டாலும் அறிவுக்கேற்ப நம் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படாமையினால், நம் தமிழ்ச் சமூகம் இன்னமும் பின்னடைவைச் சந்தித்து நிற்கிறது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

உண்மை. இப்போது டெங்குக் காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருகிறது.

நுளம்பினால் பரவக்கூடிய டெங்குக் காய்ச்சலால் பலரும் அவஸ்தைப்படுகின்றனர்.

இதுதவிர, வைத்தியசாலைகளில் மருத்துவர்களும் துணைநிலை மருத்துவ சேவையாளர்களும் டெங்குக் காய்ச்சலுக்கு ஆளான நோயாளர்களைக் காப்பாற்றக் கடும் பாடுபட வேண்டியதாக உள்ளது.

இங்குதான் ஒரு விடயத்தைக் கூறியாக வேண்டும். அதாவது டெங்குக் காய்ச்சல் பரவக்கூடிய நுளம்புகள் நம் வீட்டு வளவுகளிலும் நமது சுற்றாடலிலும் பெருகிக் கொண்டே இருக்கின்றன.

டெங்கு நுளம்புகள் பெருகுகின்ற இடங்கள் மற்றும் எவ்வாறாக டெங்கு பரவுகிறது. அதன் அறிகுறி என்ன? என்பன பற்றிய அறிவு நம் மக்களிடம் தாராளமாக உண்டு.

அந்தளவுக்கு விழிப்புணர்வுக் கூட்டங்களும் சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளும் துண்டுப்பிரசுரம் மூலமான பிரசாரங்களும் நடந்துள்ளன.

இருந்தும் இன்னமும் வீட்டு வளவுகளில் சிரட்டைகளிலும் கோம்பைகளிலும் மீன்ரின்களிலும் மழை நீர் தேங்கி நின்று நுளம்பு பெருகுவதை ஊக்குவித்துக் கொண்டே இருக்கின்றன.

இதேபோல வீட்டுக்கழிவுகளை தெருக்களில் கொட்டிவிட்டுத் தம் வேலை முடிந்துவிட்டதாகத் திருப்தியடைகின்றவர்களும் நம் மத்தியில் நிறையவே உண்டு.

இங்குதான் அறிவு இருந்தும் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படாத காரணத்தால், தீயன தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஆக, மனப்பாங்கில் மாற்றம் ஏற்படாத சமூகத்தால் ஒருபோதும் சாதிக்க முடியாது என்பதுதான் யதார்த்தமான உண்மை.

## ஜோசப் பரராஜசிங்கம் ரவிராஜ், மகேஸ்வரன் படுகொலைக்கு விசாரணை குழு நியமியுங்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

காலணித்துவ ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி பேதிரிஸ் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதை போன்று லசந்த விக்கிரமதுங்க, ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன் படுகொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழு நியமிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (13) இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், இந்த ஆண்டு மார்ச் 21, செப்டெம்பர் 09, ஒக்டோபர் 04, ஒக்டோபர் 18, நவம்பர் 24, நவம்பர் 30, டிசெம்பர் 06 மற்றும் டிசெம்பர் 08 ஆகிய திகதிகளில் இருபத்தேழு இரண்டின் கீழ் முக்கிய பிரச்சினைகளை முன்வைத்தேன். ஆனால் இதுவரை பதில் கிடைக்கவில்லை. அடுத்த ஆண்டு பாராளுமன்ற கூட்டத்தொடரின் முதல் வாரத்திலாவது இந்த கேள்விகளுக்கு பதிலளியுங்கள்.

காலணித்துவ ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி பேதிரிஸ் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள மூவரடங்கிய குழுவை அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். ஹென்ரி பேதிரிஸ் படுகொலை மிலேச்சத்தனமானது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்கள், சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க, ரிச்சட் சொய்சா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன் படுகொலை மற்றும் சாகரிகா கோமஸ், பிரேமகீர்த்தி அல்விஸ் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உண்மை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

காலணித்துவ ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி தொடர்பில் காட்டும் அக்கறை அண்மைக் காலத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் விவகாரத்தில் செலுத்த வேண்டும் என்றார். (ம-7)

## மதக் குற்றங்களை விசாரிக்க தனியான பொலிஸ் பிரிவு

சமூக வலைத்தளங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் மதக் குற்றங்களை விசாரணை செய்வதற்காக தனியான பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரையின் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ, "சமூக வலைத்தளங்கள் மூலம் செய்யப்படும் மதக் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை பெறுவதற்கு தனிப் பிரிவை நிறுவுமாறு, கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு பதில் பொலிஸ்மா அதிபர் உத்தரவு மற்றும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

அதன்படி, மதங்களை இழிவுபடுத்துவது தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவின் தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பொதுமக்கள் 0112 300 637 என்ற இலக்கத்தின் ஊடாக இது தொடர்பான முறைப்பாடுகளை அறிவிக்க முடியும்.

தொலைநகல் எண் - 0112 381 045 மின்னஞ்சல் முகவரி - ccid.religious@police.gov.lk என்ற வகையிலும் புகார் அளிக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

### சாவகச்சேரி பொலிஸ் பிரிவில்

## 7 கிலோ கஞ்சாவுடன் இருவர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சுமார் 7 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் பயணித்த வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் இருந்து கேரள கஞ்சாவை கடத்தி வருவதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சாவகச்சேரி பகுதியில், பொலிஸாருடன் இராணுவ புலனாய்வாளர்களும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில், சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த வாகனத்தை மறித்து சோதனையிட்ட போதே, வாகனத்தில் இருந்து 7 கிலோ கஞ்சாவை மீட்டுள்ளனர்.

அதனை அடுத்து, வாகனத்தில் பயணித்த இருவரையும் கைது செய்தபொலிஸார், கைது செய்யப்பட்டவர்களையும் வாகனம் மற்றும் கஞ்சாவையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். (ம-7,33)

### மீசாலை சந்திப் பகுதியில்

## இரு பேருந்துகள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்து

யாழ். சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை சந்திப் பகுதி ஏ9 வீதியில் நேற்று புதன் கிழமை பிற்பகல் இரண்டு பேருந்துகள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

யாழ்ப்பாணம்-கொடிகாமம் பயணிகள் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து மீசாலை சந்திப் பகுதியில் பயணிகளை இறக்கிக்கொண்டிருந்த வேளையில் அதே திசையில் வந்த இ.போ.ச பேருந்து மோதியதில் இவ் விபத்து நேர்ந்துள்ளது.

இருப்பினும் மேற்படி விபத்தில் பயணிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் இரண்டு பேருந்துகளும் பகுதியளவில் சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## போதைப்பொருட்களை அழிக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட 107 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் ஹெரோயின் என சந்தேகிக்கப்படும் 1 கிலோ 104 கிராம் போதைப்பொருட்களை அழிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 12 ஆம் திகதி, கொழும்பு மேல் நீதிமன்றம், அந்த போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்தது.

இன்று காலை புத்தளம் பாலாவி பகுதியில் வழக்குப் பொருட்கள் எரிக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ம-7)

## புத்தூர் சந்தியில் வாளுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

புத்தூர் சந்தியில் ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன், வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் திருட்டுச் சம்பவமொன்று தொடர்பான தேடுதல் நடவடிக்கைக்காக சென்றுகொண்டிருந்த வேளை குறித்த சந்தேகநபர் புத்தூர் சந்தியில் வாளுடன் நின்றுள்ளார். இதன்போது பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

13

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



அவருக்கு ஒரு குற்றத்திற்கு 4 வருடங்கள் வீதம் மொத்தம் 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. அத்துடன் நான்கு குற்றச்சாட்டுக்களுக்கும் ஒன்றுக்கு ரூபாய் 5000.00 வீதம் ரூபாய் 20000.00 குற்றப்பணமாகவும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டதுடன் அதனை செலுத்தத் தவறினால் ஒரு குற்றத்திற்கு 1 வருடம் வீதம் மேலும் நான்கு வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

அத்துடன் இவ்வழக்கின் இரண்டாவது குற்றவாளியான இலிகிதர் சுலைமான் லெப்பை முனாஸ் குற்றத்தினைப் புரிவதற்கு 1 ஆவது குற்றவாளிக்கு உடந்தையாயிருந்து உதவியமையின் காரணமாக இலஞ்ச சட்டத்தின் 25(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கத்தக்க இலஞ்ச சட்டத்தின் 19 (ஆ), (இ) பிரிவுகளின் பிரகாரம் இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கும் தலா இரண்டு வருடங்கள் வீதம் நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தண்டனைக் காலம் ஒரேதடவையில் செல்லும் வகையில் நீதிபதி கட்டளை பிறப்பித்தார்.

அத்துடன் இவ்வழக்கின் முறைப்பாட்டாளருக்கு ரூபா 50000.00 இழப்பீடு வழங்குமாறும் தீர்ப்பளிக்கப்பட்டதுடன் அதனை வழங்கத் தவறினால் மேலும் 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

**5. ரூபா 100,000.00 இனை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்ட கள பயிற்றுவிப்பாளருக்கு 3 ஆண்டு கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு (2019)**

அம்பாறை காணி ஆணையாளர் அலுவலகத்தில் இணைக்கப்பட்ட கள பயிற்றுவிப்பாளராக கடமையாற்றிய நபரொருவர் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தின் அடிப்படையில் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திருவிகும் களுஆரச்சியினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டார்.

இலஞ்ச சட்டத்தின் 19 (ஆ) மற்றும் 19 (இ) பிரிவுகளின் அடிப்படையில் இலஞ்சத்தினை பரிந்து கோரியமை மற்றும் பெற்றுக் கொண்டமைக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் வழக்கினை விசாரித்த நீதிபதி குறித்த கள பயிற்றுவிப்பாளரை குற்றவாளியாக்கி 3 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் ரூபாய் 3500.00 வீதம் தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன், செலுத்தத் தவறினால் 10மாத சதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், குற்றப்பணமாக ரூபாய் 100000.00 விதிக்கப்பட்டதுடன் செலுத்தத் தவறினால் 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

**6. பொதுமகன் ஒருவரிடம் ரூபா 450,000.00 இலஞ்சமாக கோரிப் பெற்றுக்கொண்ட கிராம சேவகருக்கு கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு**

பொதுமகன் ஒருவரிடம் ரூபாய் 450,000.00 இலஞ்சமாக கோரிப் பெற்றுக்கொண்ட கிராமசேவகர் ஒருவரை குற்றவாளியாக்கி தீர்ப்பளித்த கொழும்பு மேல்நீதிமன்றம் அவருக்கு எதிராக இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனையுடன் ரூபா 10,000.00 தண்டப்பணமும் விதித்துத் தீர்ப்பளித்தது.

குற்றவாளியால் தனது பேரனை காலி ரிச்மண்ட் கல்லூரியில் அனுமதிப்பதற்கு முனைந்த முறைப்பாட்டாளரான பொதுமகனிடம் மேற்படி ரூபா 450,000.00 இலஞ்சமாக கோரிப் பெற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2017 பெப்ரவரி மாதம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் 2018 நவம்பர் மாதம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணையின் முதல் நாளிலேயே அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை திறந்த நீதிமன்றில் ஒப்புக்கொண்டமையினால் மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்கா அவரை குற்றவாளியாக்கி தீர்ப்பளித்தார்.

அது தொடர்பில் மேலும் ஆராய்ந்த நீதிபதி விதிக்கப்பட்ட மேற்படி தண்டனையை பத்து ஆண்டுகளுக்கு ஒத்தி வைத்து தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.

**7. முன்னாள் பொலிஸ் சார்ஜென்டிற்கு நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு (2019)**

கஹவத்த பொலிஸ் நிலையத்தில் சேவை புரிந்த முன்னாள் பொலிஸ் சார்ஜென்ட் ஆர்.எம்.ஜயசேன இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையில் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாரச்சியினால் 23.07.2019 அன்று இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும்ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப்பத்திரத்தின் அனைத்து குற்றச்சாட்டுக்களுக்கும் குற்றவாளியாக்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் தலா 4 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன் அது ஒரே தடவையில் கழிந்து செல்லும் விதத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது.

மேலும், ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் தனா ரூபா 5000.00 வீதம் ரூபா 20,000.00 தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், இலஞ்ச சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் ரூபா 15,000.00 அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத்தை செலுத்தத் தவறின், 1 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

**8. இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளருக்கு கொழும்பு மேல்நீதி மன்றம் 10 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு (2019)**

புத்தளம் மாவட்ட / மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் முகாமைத்துவ உதவியாளராக பணியாற்றிய ஒருவர் 4500.00 ரூபாவை இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்காவினால் குற்றம் சாட்டப்பட்டவருக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனையும் ரூபாய் 5000.00 அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

முறைப்பாட்டாளருடன் சம்பந்தப்பட்ட புத்தளம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் பராமரிப்பு வழக்கு எண் 23007/16 / P 2 இன் படி, முறைப்பாட்டாளர் மாதந்தோறும் ரூபா 12,000.00 என்ற பராமரிப்பு தொகையை வழக்காளிக்கு செலுத்த வேண்டியிருந்த நிலையில் அதனை குறைப்பதற்கு உதவும் வகையில் முறைப்பாட்டாளரிடமிருந்து ரூபா 6000.00 இலஞ்சமாக கோரியுள்ளார்.

அதன்படி, முறைப்பாட்டாளர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த குற்றவாளி முதலில் ரூபா 6000.00 இனை இலஞ்சமாக கோரி 4500.00 இனை பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டு மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**9. தெரானியகல பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அனில் சம்பிகா விஜேசிங்கவுக்கு 24 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு (2019)**

தெரானியகல பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அனில் சம்பிகா விஜேசிங்கவுக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க 24 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

தெரானியகல பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அனில் சம்பிகா விஜேசிங்கவுக்கு எதிராக குற்றப்பத்திரத்தின் முன்வைக்கப்பட்ட 1, 2, 5 மற்றும் 6 ஆகிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட அவருக்கு ஒரு குற்றத்திற்கு 6 வருட வருடங்கள் வீதம் மொத்தம் 24 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அத்துடன் நான்கு குற்றச்சாட்டுக்களுக்கும் ஒன்றுக்கு ரூபா 5000.00 வீதம் ரூபா 20000.00 குற்றப்பணமாகவும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டதுடன் அதனை செலுத்தத் தவறினால் ஒரு குற்றத்திற்கு 1 வருடம் வீதம் மேலும் நான்கு வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

அத்துடன் இவ்வழக்கின் முறைப்பாட்டாளருக்கு ரூபா 250000.00 இழப்பீடு வழங்குமாறும் தீர்ப்பளிக்கப்பட்டதுடன் அதனை வழங்கத்தவறினால் மேலும் 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கானது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் தெரானியகல பிரதேச சபையின் முன்னாள் தலைவர் அனில் சம்பிகா விஜேசிங்க மற்றும் அப்போதைய தெரானியகல பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிறில் அபே விக்ரம ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டதாகும்.

வழக்கில் ஆரம்பத்திலேயே இரண்டாவது குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகனின்...

உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை மருமகன் மாமனாரை கொட்டனால் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் படுகாயங்களுக்கு உள்ளான குறித்த நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை முற்பகல் அவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாண நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா சடலத்தைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தர விட்டார்.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடிப் பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோது இன்று வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டிருந்தார். (ம-7,60)



















## இளம் குடும்பப்...

கோவிலடியைச் சேர்ந்த மயூதரன் துசிந்தினி (வயது-26) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு கடந்த வருடமே திருமணம் நடைபெற்றது. பெண்ணின் கணவர் வெளிநாட்டில் வசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண்ணுக்கு கடந்த 3ஆம் திகதி தொடக்கம் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. எனினும் அவர் 11ஆம் திகதியே தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இதனையடுத்து மேலதிக சிகிச்சைக்காக அவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே, அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் முன்னெடுத்திருந்தார்.

மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் அவரது உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,33,60)

## வடக்குக்கு...

கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் எதிர்வரும் சனிக்கிழமை கடுமையான மழைக்கான சாத்தியக்கூறு காணப்படுவதாக கணிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நேரத்தில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அதிக மழைபெய்யக் கூடும் என்பதால் மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)

## ஆறு தமிழக...

எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி கடற்படையினர் கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்து சென்றுள்ளனர்.

மீனவர்களிடம் முதல்கட்ட விசாரணை செய்த பின்னர் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தில் வைத்து யாழ்ப்பாணம் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் தமிழக மீனவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7,60)

## 2024...

வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

ஆளும், எதிர்க்கட்சிகள் இடையே கடுமையான தர்க்கம் இடம்பெற்ற நிலையில் மாலை 6.00 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெற்றது.

ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்ததுடன், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களித்தது.

தேசிய மக்கள் சக்தியும் எதிராகவே வாக்களித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் உறுப்பினர்கள் மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பட்ஜெட்டுக்கு ஆதரவாகவே வாக்களித்தது.

அண்மையில் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ரொஷான் ரணசிங்க, பட்ஜெட்டுக்கு எதிராகவே வாக்களித்தார். வடிவேல் சுரேஷ் இரண்டாம் வாசிப்பை போன்று பட்ஜெட்டை ஆதரித்தே வாக்களித்தார். (ம-7)

## பாதுகாப்புக்கு...

பில்லியன் பணத்தை பாதுகாப்பிற்காக ஒதுக்கி வைத்திருந்தால் நாட்டினுடைய பொருளாதாரம் எவ்வாறு வளரும் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

குறித்த விடயத்தை அவர் நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற வரவு செலவு திட்ட விவாதத்தின்போதே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிக முக்கியமாக இம்முறை கொண்டுவரப்பட்ட வரவு செலவு திட்டத்தினுடாக பல விடயங்கள்மறைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

சென்ற வருடமும் வரவு செலவு திட்டத்தினூடாக தேர்தலுக்கு நிதி ஒதுக்கிடப்பட்டதாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கப்பட்டதாகவும் செயற்பாடுகள் அறிவிக்கப்பட்டது. ஆனால் இது அறிக்கையாகவே பாராளுமன்றில் இருக்கின்றது.

மொத்த வரவ செலவு திட்டத்தில் 15.2 வீதமான பகுதி பாதுகாப்பிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் இப்போது யுத்தம் இல்லை.எங்கேயும் குண்டுச் சத்தம் இல்லை. யாரும் துப்பாக்கி தூக்கியதாக தெரியவில்லை.

இந்த நாட்டிலுள்ள படைகளை குவித்து இராணுவ வலயமாக வடக்கு-கிழக்கை வைத்துக் கொண்டு இவ்வளவு நிதியையும் திரும்ப ஒதுக்கீடு செய்வதென்றால் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் எவ்வாறு வளர முடியும் என கேள்வி எழுப்பினார். (ம-7)

## கடன் மறுசீரமை...

தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையின் அங்கீகாரத்துடன், இலங்கையின் நிதித்துறையை பெரிதும் பலப்படுத்தும்வைப்புத் தொகை காப்புறுதிக்காக உலக வங்கியில் இருந்து 150 மில்லியன் டொலர்கள் கிடைப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, அதன்மூலம் இந்த நாட்டின் வங்கி மற்றும் நிதித்துறை 100% பாதுகாப்பாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

வற் உட்பட பல்வேறு வரிகள் விருப்பத்துடன் விதிக்கப்பட்டதல்ல, ஆனால் நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு அந்த கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ள தாகத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த நடவடிக்கைகளினால் பொருளாதாரம் வலுவடையும்போது மக்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்க முடியும் எனவும் சுட்டிக்காட்டினார். (ம-7)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் பொருளாதார மத்திய நிலையங்கள், வர்த்தக நிலையங்களில் வெங்காயத்தின் விலை வேகமாக அதிகரித்துள்ளது.

கொழும்பு உள்ளிட்ட ஏனைய பகுதிகளிலும் பெரிய வெங்காயம் ஒரு கிலோ 400 ரூபாவிற்கும் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கிராம் வெங்காயம் 400 ரூபா முதல் 470 ரூபா வரை நேற்று விற்பனை செய்யப்பட் டுள்ளது.

வெங்காயம் இறக்குமதிக்கு இந்தியா கட்டுப் பாடுகளை விதித்துள்ளதையடுத்து, விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)

## க.பொ...

களுக்கான இலவச சூம் கற்கைநெறிகள் இன்று வியாழக் கிழமை, நாளை வெள்ளிக் கிழமை மற்றும் 18, 19, 20 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது.

பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணிவரை குறித்த கற்கைநெறிகள் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் இதில் பங்குபற்றுமாறு யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட பேராசிரியர் பு.ரவிராஜன் தெரிவித்துள்ளார்.

Meeting ID : 466 134 3917

Zoom link:https://learn.zoom. us/j/4661343917?omn=91322584005

(ம-7)


**Canada and Italy Visa**

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

பணியாளர் தேவை

VISA CONSULTANT

134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna.

077 038 5584 (18168)

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள் (C-7896)

V2 TRAVELS

எமது கிளைகள்: • கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777

v2vacancies@gmail.com

**Sales வாகனம் வாடகைக்கு**

மூடியடைக்கப்பட்ட சுப்பர் AC வாகனம் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு

077 925 4050 (18218)

**CANADA VISITOR VISA**

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7896)

0777-068-777

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

**வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்**

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18185)

076 825 7716 (ஆகாஸ்)

**வாருங்கள்... விடுதலைப் பெருவிழா இலவசம்...**

கவலை, கண்ணீர்,தீராத வியாதி, பிசாசின்பிடி, பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள், பரம்பரை சாபங்கள், அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து

இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!

நாற்சதுர சுவிசேஷ சபை, முத்திரைச் சந்தி, நல்லூர்.

15, 16,17 டிசம்பர் 2023 4.00Pm (18170)

15 ஆம் திகதி ஒளிவிழா நிகழ்வும், 16 ஆம் 17 ஆம் திகதிகளில் சுகமளிக்கும் ஆராதனையும் நடைபெறும்.

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, 673, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**TECHNO WORLD**

A/L தொழில்நுட்பப்பிரிவு

A/L 2023 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய

இலவசக் கருத்தரங்கு

16, 17 December 2023

தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

பிற்பகல் 12 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை (C-7894)

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

தொடர்புகளுக்கு : 077 017 5346

**A/L தொழினுட்பப்பிரிவு**

Techna Technical Institute

Smart thinking leads to innovate

விசேட செயலமர்வு

077 170 3549

வீரசிங்கம் மண்டபம், 3 ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

**A/L 2023**

தொழினுட்ப பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கு

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் – M.விஷ்ணு – 16, 17 DEC காலை 8.00 - 12.00 மணி வரை

பொறியியல் தொழினுட்பவியல் – S.மயூரதன் – 16, 17 DEC காலை 8.00 - 12.00 மணி வரை

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் – S.சக்தி – 16, 17 DEC மாலை 12.30 - 4.30 மணி வரை

தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் – T.லவன்

விவசாய விஞ்ஞானம் – S.சஜீபன்

கணிதம் – T.சசிகரன்

புவியியல் – S.Pகரன் (18213)

23, 24 DEC காலை 8.00 - 12.00 மணி வரை

அனுமதிகளுக்கு 15/12/2023 முன் முற்பதிவுகளை நேரடியாக அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



கடந்த 22.11.2023 புதன்கிழமை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி A.யூட்சன் அவர்களின் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவி ஏற்ற

திரு. மகாலிங்கம் விவேகானந்தன்

அவர்களின் சேவை சிறக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

BEST WISHES (18215)

சிங்கம்ஸ் டச்சு வீதி, சாவகச்சேரி.

வாழ்த்துவோர்: ச.அருள்ராஜா

**முழுநேர/ பகுதிநேர வேலைவாய்ப்பு**

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமைகள்

- G.C.E(O/L) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 - 60 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை(CV) கீழுள்ள Whatsapp இலக்கத்திற்கு அல்லது மின்னஞ்சல் (Email) முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

077 348 1282

yprasa@gmail.com (18217)

**காணி விற்பனைக்கு**

Golden Real Estate

கைதடிச் சந்திக்கு அருகாமையில் 24 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

077 468 3354,076 755 8606 (18224)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.197, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org